மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.எஸ். தென்னரசு.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டில் மஞ்சள் வணிக வளாகத்திற்கு அடிக்கல் நாட்டிய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்பாதத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு ஈரோட்டில் மாவட்டப் பதிவாளர் அலுவலகமும், சார்பதிவாளர் அலுவலகமும் வாடகைக் கட்டடத்திலே இயங்கிவருகின்றன. அந்த இரண்டு கட்டடங்களுக்கும் புதிய அரசு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நடப்பு நிதியாண்டில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 29. திரு. சி. சிவசாமி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

29—

தனி மாவட்டம்

***74269—திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து திருப்பூர் நகரை தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2006 ஜனவரி 18]

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் என்பது 15 சட்டமன்றத் தொகுதிகள் அடங்கிய மிகப்பெரிய மாவட்டம் ஆகும். அந்த மாவட்டத்தில், கோவை மாநகருக்கு அடுத்தபடியாக மிகப்பெரிய நகரமாகத் திகழ்வது திருப்பூர் நகரமாகும். திருப்பூர் நகரம் மிகப்பெரிய ஏற்றுமதி தொழில் நகரம். அந்தத் திருப்பூர் நகரத்தில் மோட்டார் வாகன வரி வசூலாகட்டும் அல்லது மின் துறை கட்டணத்தினுடைய வரி வசூலாகட்டும் தமிழகத்திலேயே அதிகப்படியான வருவாய் உள்ள இடமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. எனவே, பொதுமக்களினுடைய வசதிக்காகவும், தொழிலினுடைய முன்னேற்றத்திற்காகவும் திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு கோவை மாவட்டத்திலே இருக்கின்ற பல்லடம், பொங்கலூர், அவிநாசி, மேட்டுப்பாளையம் போன்ற தொகுதிகளையும், 10 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளடங்கிய ஈரோடு மாவட்டத்தில் இருக்கின்ற, திருப்பூருக்கு அருகில் இருக்கின்ற பவானிசாகர், பெருந்துறை சட்டமன்றத் தொகுதிகளையும் இத்தோடு இணைத்து ஒரு புதிய மாவட்டம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சட்டமன்ற, பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகள் மாற்றி அமைக்கப்பட உள்ளதாலும், 15–2–2004 முதல் நிர்வாக அலகுகளைப் பிரிக்கவோ அல்லது சேர்க்கவோ கூடாது என தடை விதித்து எல்லை வரம்பிடுதல் ஆணையம் ஆணையிட்டுள்ளதாலும், கோவை மாவட்டத்தைப் பிரித்தும், ஈரோடு மாவட்டத்தின் சில பகுதிகளைச் சேர்த்தும் திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கக் கோரும் கோரிக்கை தற்போது ஏற்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் அமைக்கின்ற சூழ்நிலை தற்போது இல்லாவிட்டாலுங்கூட, திருப்பூர் நகராட்சி என்பது மிகப்பெரிய நகராட்சியாக இருக்கின்ற காரணத்தினாலும், அதையொட்டி இருக்கின்ற பேரூராட்சிகளாக வேலம்பாளையம், நல்லூர் போன்ற பேரூராட்சிகள் எல்லாம் நகராட்சிகளாக உருவாகியிருக்கின்ற காரணத்தாலும், திருப்பூரை ஒரு

[2006 ஜனவரி 18

மாநகராட்சியாகவாவது அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி போடவேண்டிய இடம் வேறு. வினா எண் 30. திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

30—

கணினி மென்பொருள் உற்பத்தி மையம்

* **67557—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் கணினி மென்பொருள் உற்பத்தி மையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): ஈரோடு மாவட்டத்தில் கணினி மென் பொருள் உற்பத்தி மையம் அமைத்திடும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. ஆனால், தனியார் நிறுவனங்கள் கணினி மென்பொருள் உற்பத்தி மையம் அமைக்க முன்வந்தால் அரசு அதனை ஊக்குவிக்கும்.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசில்...

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கான அமைச்சரின் பதில் முடிகிறவரை வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசில் 10,730 கோடி ரூபாய் மென்பொருள் ஏற்றுமதி செய்து, 15,000 கோடி ரூபாய் என்று இந்த ஆண்டு இலக்கு நிர்ணயித்துள்ள மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய